# மாலத்தீவுகள் குறித்த பத்திரிக்கை செய்தி

அக்டோபர் 19, 2013

மாலத்தீவு அதிபர் தேர்தலின் முதல் சுற்று வாக்குப்பதிவு இன்று அக்டோபர் 19ந்தேதி நடைபெற வேண்டியது நடைபெறாமல் போனது குறித்தும் அதன் அரசியல் அமைப்புச்சட்ட கட்டளைப்படி தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் அனுமதிக்கப்படாதது குறித்தும் இந்தியா ஆழ்ந்த ஏமாற்றம் அடைந்துள்ளது.

மாலத்தீவில் ஏற்பட்டு வரும் நிகழ்வுகளை இந்தியாவும் சர்வதேச சமுதாயமும் மிகவும் நெருக்கமாக கண்காணித்து வருகின்றன. அங்கு ஜனநாயக நடைமுறைகளை முடக்க நடைபெற்று வரும் முயற்சிகள் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளன. மாலத்தீவு மக்கள் தங்கள் எதிர்காலத்தை தீர்மானித்துக்கொள்ள வேண்டிய உரிமை அவர்களுக்கு உள்ளது. 2013 செப்டம்பர் 7ந்தேதி நடைபெற்ற முதல் சுற்று வாக்குப்பதிவின் போது 88% வாக்குகள் பதிவானதன் மூலம், புதிய அதிபரை தேர்ந்தெடுக்க அவர்கள் விரும்புவது தெளிவாக தெரிந்த்து. இந்த தேர்தல் பெரும்பாலும் அமைதியாகவும் நேர்மையுடனும் நடைபெற்றதாக அங்கிருந்த ஏராளமான உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பார்வையாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

மாலத்தீவு மக்கள் இதுவரை காட்டிவந்த பொறுமை மற்றும் கட்டுப்பாட்டின் மூலம் வெளிப்படுத்திய அவர்களின் விருப்பங்களையும் ஆசைகளையும் மனதிற்கொண்டு இந்த தேர்தல் நடைமுறைகள் மறுபடியும் சரியான பாதைக்கு உறுதியான காலக்கெடுவுடன் உடனடியாக கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகிறது. அதன் மூலம் அரசியல் அமைப்புச்சட்டத்தின் கட்டளைப்படி புதிய அதிபர் 2013 நவம்பர் 11ந்தேதி பதவி ஏற்கவேண்டும்.

மாலத்தீவு அரசும் அனைத்து கட்சிகளும் மாலத்தீவு மக்கள் மீதான தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றி, அங்கு நடைபெறும் அதிபர் தேர்தலில் ஆக்கபூர்வமான பங்காற்றி, தேர்தல் ஆணையத்திற்கு உதவ வேண்டும் என்றும் வன்முறையை கைவிட்டு அமைதியை

நிலைநாட்டப்பாடு பட வேண்டும் என்று இந்தியா அழைப்பு விடுக்கிறது.

புது தில்லி

அக்டோபர் 19, 2013